1984 மார்ச் 15]

(ஆ) இந்தப் பண்ணையை விஸ்தரிப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

[முற்பகல் 9-40]

திரு. டி. மணி : தலைவரவர்களே, பேச்சிப்பாறையில் உற்பத்தியாகிற அன்னாசிப்பழம் நல்லமுறையில் பலன் அளிப்பதாக இருக்கிறது. அங்கு உற்பத்தியாகிற பழங்கள் எந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக யார், யாருக்கு விற்பனைச் செய்யப்படுகின்றன? ஏற்கெனவே இந்த உற்பத்திக்கு ஏற்ற நல்ல கால நிலை அங்கே இருப்பதால் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய இதரப் பகுதிகளையும் கையகப்படுத்தி, அந்தப் பழத் தோட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்போது அமைந்திருக்கிற பழப்பண்ணை 25 ஏக்கரில் இருக்கிறது. தொடர்ந்து ஓரளவுக்கு இலாபகரமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பண்ணை வனத்துறையிலிருந்து குத்தகைக்கு நிலத்தை எடுத்து, அந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் இருக்கிற நிலங்களைக் கையகப்படுத்தி பண்ணையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இல்லை. காரணம் நிலத்தைப் பெற வழியில்லை. ஆனால் நாம் அங்கே பணிபுரிகிறவர்களுக்கு குடியிருப்பு போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தால், இன்னும் நல்லமுறையில் அந்தப் பண்ணை நடைபெறும் என்று கருதுவதால் அதற்காக 5,80,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டும், அந்தப் பண்ணையை விரிவுபடுத்தலாம் என்று கருதுகிறேன். விற்பனையைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற துறை அலுவலர்களால் தான் விற்பனை செய்யும் பணி நடைபெறுகிறது.

கலவை பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

324—(*வினா 17991)—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலவைப் பேரூராட்சிக்குப் பாலாற்றிலிருந்து குடிதண்ணீர் கொடுக்க குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெறும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எப்பொழுது குடிநீர் வழங்க இயலும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். நில ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் திட்டச் செயலாக்கம் தாமதப்பட்டுள்ளது.

(ஆ) 22—4—1983 முதல் குடிநீர் விநியோகம் செய்யப் பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, கலவை பேரூராட்சிக்கு பாலாற்றங்கரையிலிருந்து கொடுக்கப்பட்டு வருகிற குடிநீர் சப்ளைக்கு இப்போது மின்சார சப்ளை இல்லாத காரணத்தால் ஆயில் எஞ்சின் வைத்து, தண்ணீர் சப்ளை செய் யப்படுகிறது. அது மட்டுமல்லாமல் பொதுக் குழாய்கள் அதிக மாக கொடுக்கப்படாத காரணத்தால் இன்னும் குடிநீர் பிரச்சனை இருக்கிறது. அதனால் அங்கே பொதுக் குழாய்கள் மேற்கொண்டும் அதிகமாக போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு எவ் வளவு தொகை செலவிடப்பட்டிருக்கிறது? குறிப்பிட்ட தொகைக் குள் வேலை முடிந்துவிட்டதா அல்லது மேற்கொண்டும் அதிகத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, அந்த ஊருக்கு 18 பப்ளிக் ஃபவுண்டன்ஸ் — பொதுக் குழாய்கள் இருக்கின்றன. அவை போதுமானவை என்று கரு தப்படுகிறது. 20 கொடுத்தால், போதாது, 22 வேண்டுமென்று தான் கேட்பார்கள். இப்போது கொடுத்திருக்கிற 18 போது மானவை என்று கருதப்படுகிறது. பவர் சப்ளை இல்லை என்று சொன்னார்கள். அதுபற்றி விசாரித்து ஆவன செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, கலவை பேரூராட்சிக்கு இரண்டு டாங்குகள் கட்டித்தரப்பட்டிருக்கின்றன. ஆனால் முறைப்படி இன்னும் திறக்கப்படவில்லை. அந்த இரண்டு டாங்குகளின் கொள்ளளவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர் களே, அதுபற்றிய தகவல் தற்போது இல்லை. ஆனால் அந்த ஊருக்கு போதுமான அளவு தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கலவை நகரப் பஞ்சாயத்து மற்றும் வழியில் உள்ள ஊர்களுக்கு 12 கிலோமீட்டர் தூரத்தில் பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பணி முடிந்து, தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் தான் இருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS